(இ) மணக்காடு கிராமத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் இரண்டு பேர் மறைவு.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நாகர்கோவில் கிராமத்தைச் சேர்ந்த மணக்காடு என்ற கிராமத்திலிருந்து 17–6–1981ஆம் நாள் கடலில் மீன்பிடிக்கச் சென்ற 4 பேர்களில் இரண்டு பேர்கள் மறைந்துவிட்டார்கள். திரும்பவே இல்லை. மற்ற இரண்டு பேர்கள் மயக்கமாக நிலையில் 5 நாட்கள் கழித்து தலைமன்னார் என்ற இடத்தில் ஒதுக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை இலங்கை அரசு எடுத்துச் சென்று சிகிச்சை அளிக்கும்போது, மாண்ட்ரோஸ் என்பவர் இறந்து விட்டார், மீதம் உள்ள ஒருவர் அருள்மணி என்பவர்......(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஆளும்கட்சியின் உறுப்பினராகத்தான் இருக்கிறீர்கள். பிரச்னையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பினால் வேறு வகையாகக் கொண்டு வந்து தீர்த்துக் கொள்ளலாம். இங்கே அவையில் அதைக் கொண்டு வந்து தீர்த்து வைக்க முடியாது. ஆகையால் தயவுசெய்து உட்காருங்கள்.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 44ஆவது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்து பிரச்னை ஒன்றை திரு. உமாநாத் அவர்கள் அவையில் எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். ......(குறுக்கீடு). (கூச்சல், குழப்பம்)

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, ஆளும்கட்சிக்கு மட்டும் அனுமதி கொடுக்கிறீர்கள். எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு கொடுக்க மறுக்கிறீர்களே, இது நியாயமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுக்கு அனுமதிகொடுத்திருக்கிறேன். அவர்ஒன்றும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் இல்லை. தவிர இருக்கும் மற்றப் பிரச்னைகளையும் பார்க்க வேண்டும். அங்கத்தினர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு இன்னும் 7, 8 பில்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. ஒவ்வொருவரும் அதில் தங்கள் சிந்தனைகளை செலவழித்து பேச இருக்கிறீர்கள். அதை எல்லாம் விட்டு விட்டு இப்படி திடீர் திடீர் என்று பிரச்னைகளைக்கிளப்பிக் கொண்டிருந்தால் தீர்த்து விட முடியாது திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மிகவும் முக்கியமான பிரச்னையை நியாயமானதை எழுப்பினார். அதனால் அனுமதித்தேன்.

1981 செப்டம்பர் 1] *[பேரவைத் தலைவர்]*

வின்சென்ட் அவர்களுக்கும் அனுமதி தர மறுத்திருக்கிறேன். அவரை வேறுவழியில் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளச் சொல்லி யிருக்கிறேன்.

அவை உரிமை மீறல் பிரச்னைகள் இரண்டு இருக்கின்றன. அவை உரிமை மீறல் பிரச்சினைக்கு முன் உரிமை கொடுத்தாக வேண்டும்.

THIRU K. S. G. HAJA SHAREEF : I have given notice of a motion under Rule 55.

MR. SPEAKER : It is coming up. The hon. Member will please wait. First we must take up the privilege issue. Then only, adjournment motion will come.

3. உரிமைப் பிரச்சினை.

வானொலி நிலையத்தின்மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 246 வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையைப் பேரவையில் எழுப்ப இசைவு அளிக்கவேண்டும் என்று கேட்டு ஒரு முன்னறிவிப்புக் கொடுத்து இருக்கிறார்கள். இதற்கு ஏன் இசைவு அளிக்க வேண்டும் என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் ஒரு சக்திமிக்க ந்யூஸ் மீடியா ஆல் இந்தியா ரேடியோ என்பது தெரிந்ததே. அதற்கு எதிராக ஒரு உரிமைப் பிரச்னையைக் கிளப்பினால் சில 'கான்ஸிக்வென்ஸஸ்' இருக்கலாம் என்று தெரிந்தே அவையினுடைய உரிமை என்று வருகிறபோது மற்ற 'கான்ஸிக்வென்ஸஸை' விட உரிமைதான், பேரவையின் உரிமைதான் பெரிது என்ற முறையில்தான் ஆல் இந்தியா ரேடியோவிற்கு எதிராக இந்த உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டுவருகிறேன்.

29-8-1981 தேதி அன்று கேள்வி நேரம் முடிந்ததும் நம் நாட்டின் பிரதமருக்கு எதிராகவும் இரண்டு எம்.பி.க்களுக்கு எதிராகவும் அவர்களை ரே கமிஷன் விசாரணைக்கு உட்படுத்தவது பற்றி ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் நான் கொடுத்தது பற்றி உங்கள் கவனத்திற்கும் இந்த அவையின் கவனத்திற்கும் கொண்டு